

நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸில் தோட்டக்கலைத்துறை மற்றும் நீலகிரி மாவட்ட அங்கக விவசாயிகள் சங்கத்தால் (TOHFA) சிறப்பாக நடத்தப்பட்டு வரும் அங்கக வேளாண்மை விளைப்பொருட்களுக்கான வாரசந்தை திட்ட செயலாக்கத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் (12.08.2024) அன்று நேரில் பார்வையிட்டார்.

### 300 மாணவ – மாணவியர் பெயர்களில் மரக்கன்றுகள்

# ‘பசுமை சைதை’ சார்பில் ‘நந்தவனம்’ ஆகும் நந்தனம் அரசுக் கலைக்கல்லூரி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மரக்கன்றுகள் நட்டு வைத்து பேச்சு!

சென்னை,ஆக.15-

பசுமை சைதை சார்பில் நந்தனம் அரசு கலைக் கல்லூரி நந்தவனம் ஆகிறது நிகழ்வில் 300 மாணவமாணவியர் பெயர்களில் மரக்கன்றுகள் நட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாவுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (14.8. 2024) விழாப் பேருரையாற்றினார். அவ்வுரை வருமாறு:

நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் ஏற்கனவே அதிகமான வளர்ந்த மரங்கள், அடர்ந்த மரங்கள் இருந்தாலும், இப்போது கூடுதலாக 300 மரங்கள் நடப்பட இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற அரசு கலைக்கல்லூரிகளில் நந்தனம் அரசுக் கலைக்கல்லூரியில் அதிகமான பசுமைப்பரப்பைக் கொண்டிருக்கிறது. இதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை என்றாலும் இந்தத் திட்டத்தை ஏன் இங்கு நடத்த முடிவெடுத்தோம் என்றால், நந்தனம் கலைக் கல்லூரியில் இந்த மரங்கள் நடுவதன்மூலம் தமிழ்நாட்டில் பயில்கிற மற்ற மாணவர்கள், உயர்க்கல்வி படிக்க செல்லும் மாணவர்களுக்கு மரங்களை நட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதற்குத்தான் இந்த நிகழ்ச்சியினை இந்தக் கல்லூரியின் வாயிலாக தொடங்கி வைத்திருக்கிறோம்.

இங்கு தொடங்குவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. ஏறத்தாழ 1902ஆம் ஆண்டு தொடங்கி இந்த கல்லூரியின் வரலாற்றை கல்லூரி முதல்வர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். இன்னும் இரண்டாண்டுகளில் நிறைவில் 125வது ஆண்டு விழா கொண்டாட இருக்கிறது. இப்படி பழம்பெருமை வாய்ந்த இக்கல்லூரியில் இந்தாண்டு முதல் இருபாலரும் பயிலும் திட்டத்தை முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

அந்த புதிய மாணவியர்களை வரவேற்கும் வகையிலும் இந்த பசுமைத் திட்டத்தை தொடங்கி வைக்கலாம் என்ற வகையில்தான் , ஆக, இந்த இரண்டு காரணங்களால் இந்தக் கல்லூரியில் மரங்கள் நடும் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பசுமை சைதை தொடங்கியதிலிருந்து என்ன செய்தோம் என்பதை இங்கு நீங்கள் குறும்படம் வாயிலாக பாத்திருக்கிறீர்கள். 2017ஆம் ஜூலை 1ஆம் அன்று தொடங்கப்பட்ட பசுமை சைதைத் திட்டத்தில் இதுவரை ஒரு லட்சத்து 20 ஆயிரம் மரங்கள் நடப்பட்டிருக்கிறது. மரங்களை நடுவது, அல்லது நடத் தருவது எளிதான காரியம். நட்ட மரங்கள் வளர்கிறதா? என்பதைப் பார்ப்பதும், நட்ட மரங்கள் வளர்ந்திருக்கிறது என்பதில் மகிழ்வுகொள்வதும், நட்ட மரங்கள் தொடர் பராமரிப்பில் இருக்கிறது என்பதை தொடர்ந்து நாம் கண்காணிப்பதுதான் இந்த பசுமை சைதையின் நோக்கம்.

இதில் 50 ஆயிரம் மரங்கள், குறிப்பாக ஹைப்பிரீடு என்று சொல்லக்கூடிய தென்னை மரங்களும், மாமரங்களும் ஏற்கெனவே கஜா புயலினால் பாதிப்புக்குள்ளான டெல்டா மாவட்டங்களில், வணக்கத்திற்குரிய இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால், மூலம் பட்டுக்கோட்டை மாவட்டம் சுரப்பள்ளம் என்கிற கிராமத்திலும், நெடுவாசல் என்கிற கிராமத்திலும், வேதாரண்யத்திலும், இந்த மரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, அந்த ஐம்பதாயிரத்தோடு சேர்த்துதான் ஒரு லட்சம் மரங்கள் ஏற்கெனவே சைதாப்பேட்டையில் நடப்பட்டது.

தொடர்ந்து மிக்ஜாம் புயலில் மிஸ்ஸான மரங்கள் என்கிற வகையில் 5 ஆயிரம் மரங்கள் வைகைப் புயல் வடிவேல் அவர்களின் வாயிலாக முழுமையாக நட்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்த கல்லூரியில் 300 15 அடி உயரமுள்ள மரங்கள், வளர்ந்த மரங்களாகவே நடப்பட இருக்கிறது.

இதன்மூலம் தமிழகம் முழுவதும் இருக்கிற கலைக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், சட்டக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கும், ஏன், 12 ஆம் வகுப்பு முடித்து உயர்க்கல்வி கற்க செல்லும் மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் நாம் விடுக்கிற வேண்டுகோள் என்பது, முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னால் தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள்.

இந்தக் கல்லூரியில் யாரெல்லாம் இத்திட்டத்தில் பதிவு செய்கிறீர்கள் என்று முதல்வர் அவர்கள் மூலம் கேட்டபோது, முதலாமாண்டு பயில்கிற 360 மாணவர்கள் இதில் தங்களது விருப்பத்தினைத் தெரிவித்திருக்கிறீர்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனென்றால் கிராமப்புறங்களில் இருந்து வருகிற மாணவர்களுக்கு இயற்கையின் மீது உள்ள காதல், சுற்றுசூழல் மீதான ஆர்வம். ஆகவே இந்த 360 மாணவர்களுக்கும், இந்த மேடையிலிருந்து உங்கள் பாதங்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இந்த மண்ணை எவனாலும் மலடாக்க முடியாது என்பதற்கான சான்று.

இந்த மண் மலடாகிக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தால்தான் வயநாடு 400க்கும் மேற்பட்டவர்களை இந்த மண்ணுக்குள் புதைத்திருக்கிறது. இந்த மண் மலடாகிக் கொண்டிருக்கிறது என்பதால்தான், பேரிடர் வருகிறது. வெள்ளச்சேதங்கள் நிகழ்கிறது. புயல், பூகம்பம், நிலச்சரிவு ஆகியவை ஏற்படுகிறது. இதனால்தான் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை கொத்துக்கொத்தாக மண்ணுக்குள் கொண்டுச் சேர்த்திருக்கிறது.

எனவே நம்முடைய சந்ததியினர் இந்த மாதிரியான பாதிப்புக்குள்ளாகிவிடக் கூடாது என்ற காரணங்களால் மேடையில் இருக்கிறவர்கள் எடுக்கிற முன்னெடுப்பு. எதிரில் உள்ள மாணவர்கள் தருகிற ஒத்துழைப்பு மிகப்பெரிய பாராட்டிற்குரியது. இந்த 300 மரங்களிலும் மாணவர்கள் பெயர்கள் பதிக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டு அந்த மரத்தை கண்காணித்தால் போதும். பெரிய அளவில் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் வடகிழக்கு பருவமழை நெருங்கிக்கொண்டிருக்கிற சூழலில் நடுகிறோம். ஈரப்பதம் மண்ணில் நன்றாக இருக்கிற சூழலில் நடுகிறோம். இரண்டு மூன்று மாத காலம் இந்த மரம் வேரூன்றிவிட்டால்போதும். அதன்பிறகு நீங்களே நினைத்தாலும் இந்த மரத்தை அழிக்க முடியாது.

அடுத்தாண்டு இதே நாளில் இங்கு மேடை போட்டு இந்த 300 மாணவர்களுக்கும் பசுமைக் காவலர் என்ற விருது பசுமை சைதை சார்பில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். சைதாப்பேட்டை முழுவதும் நடப்படுகின்ற மரங்களுக்கு அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரியில் படிக்கிற மாணவர்கள் எந்தளவுக்கு சிறப்புக்குரியவர்கள் என்பதற்கு இந்த வரலாற்றை கேட்டாலே நன்கு அறிந்து கொள்ளலாம். ஒரு மாணவனுக்குக் கல்வியைத் தந்தால் அவருக்கு எல்லாவற்றையும் கொடுத்ததாகப் பொருள் என்கிற வகையில் இந்தக் கல்லூரி மிகப்பெரிய சாதனைப் படைத்திருக்கிறது. இக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளியாவார். அவர் என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தார். இக்கல்லூரியில் BSc (A&F), BSC (Statistics), BSc (Public Administration) பயில்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுச்சென்று அந்த படிப்புகள் இங்கே தொடங்கப்பட்டுள்ளன.

அதுபோல் இக்கல்லூரிக்கு கலையரங்கம் ஒன்று வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். விழாக்கள், பட்டமளிப்பு விழாக்கள், இலக்கிய நிகழ்வுகள் ஆகியவற்றை நடத்துவதற்கு திறந்த வெளியில் நடத்துகிறோம் என்று கேட்டார்கள். சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1.5 கோடி மதிப்பில் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டாண்டுகளில் 28 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அரசு கல்லூரிகளில் பயின்று இதுவரை 461 பேர் வெளிநாடுகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பயில்கிறார்கள். அரசு பள்ளிகளில் படிப்பது வறுமையால் அல்ல. அது பெருமை என்கிற நிலை தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு



சென்னை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (15.8.2024 – வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகஅவைத்தலைவர்எஸ்.குணசேகரன்தலைமையில்நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக முப்பெரும் விழா, கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன்
செயலாளர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

### வணிக வரித்துறை சார்பில் -அனைத்து இணை ஆணையர்களின்

# பணித்துறை குறித்து ஆய்வுக் கூட்டம்! ஊக்கத் தொகை வழங்கல்!

## அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஆக.15-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமையில் நேற்று (14.08.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் போது வணிகவரித்துறை வரி பகுத்தாய்வுப் பிரிவில்(Tax Research Unit) சிறப்பாக பணியாற்றி அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தந்த இராம்குமார், உதவி ஆணையர் (மாவ) மற்றும் முஹம்மது இர்ஃபான், மாநில வரி அலுவலர், ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு லட்சம்) காசோலையை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்.

நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி வளாகத்தில் உள்ள வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில், துறைசார்ந்த பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 24 வணிகவரி உதவி ஆணையர்கள் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த ஆறு உதவி ஆணையர்களை அமைச்சர் சந்தித்து பயிற்சியாளர்களிடம் பயிற்சி விவரங்களை கேட்டறிந்து, நல்ல முறையில் பயிற்சி பெற்று, சிறப்பாக பணியாற்றுமாறு அறிவுரை வழங்கினார்.

மேலும் அனைத்து இணை ஆணையர்களும் தங்கள் கோட்டங்களை சார்ந்த பகுதிகளில் அடிக்கடி ஆய்வு செய்து, போலிபில் தயாரித்து வணிகம் செய்யும் நிறுவனங்களை கண்டறிதல், ரூபாய் 40 லட்சத்திற்கு மேல் தொழில் செய்வோர் விவரங்களை கண்டறிந்து GST வரம்பிற்குள் கொண்டுவருதல், தொடர்ந்து அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் நிறுவனங்களின் பதிவை ரத்து செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தல், உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. துர்கா மூர்த்தி, வணிகவரித்துறை கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் 13.08.2024 அன்று மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படி, 58, 61, (61அ) 108, 108 (அ) ஆகிய வட்டங்களின் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நாணயம் வெளியிட்டு விழாவையொட்டி ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், கே.எஸ்.எம். நாதன், நிர்மலா தேவி, எல்.சுந்தர் ராஜன், எஸ்.ரசூல், டி.வி. வேலு, கே.அன்னபூரணி, வட்ட கழக செயலாளர்கள் வி. விஜயகுமார், இ.மொய்தீன் எஸ்.டால்பின் ஹரி, வான்மதி கதிரவன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2), மகளிர்கள், இளைஞர்கள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சத்துணவு திட்டம், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கினை பார்வையிட்டார். உடன் சமூகநலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், சமூகநலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை இயக்குநர் வே.அமுதவல்லி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் இயக்குநர் மெர்சி ரம்யா , குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் டாமி ஜான் வர்கீஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட கே.ஜி. கண்டிகை. வங்கனூர். இராகி பேட்டை. பாலாபுரம். ஸ்ரீகாளிகாபுரம். விடியங்காடு. ஆகிய ஊராட்சிகளின் 850 க்கு மேற்பட்ட தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட கல்வி அலுவலர் ஆனந்தரசன். ஒன்றிய செயலாளர்கள் சி.என். சண்முகம், ஆர்த்திரவி, பெ.பழனி. பெற்றோர் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.